முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1051

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

15.08.2022, திங்கட்கிழமை

1. பரமானந்த ஞான சதாசிவ குருவே
பாமரர்க்கும் அருளும் ஞான குருவே
வரம்பல பெற்று என் சக்தியாக
வையகத்தை காக்கின்ற ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஆடி மாதம் 30 நாள், 15.08.2022 திங்கட்கிழமை)
வரம்பல பெற்று என் சக்தியாக
வையகத்தில் ஞான ஆட்சி அருள வேண்டி
3. வேண்டியே அவதாரம் எடுத்துள்ள
வேலவனார் என் சூட்சும உயர் ஞானியே
ஞானியே உந்தனுக்கு ஆறுமுகன் யான் ஞாலமதில் பரிபூரணமாய் உள்ளிருந்து
துணிவுபட உலகை மாற்றுகின்ற திடமும் தீட்சையும் சர்வபலமும் தந்து காத்தருள்புரிவேன்
4. அருளாக உந்தனுள் யானிருந்து அற்புதம் நடத்த
அகிலத்தில் உன்னை அறிந்து உலகோர் வந்து இணைய
இணையவே அவர்களெல்லாம் உன் தீட்சை பலத்தால்
இனிவருங்காலம் ஞானிகளாகி இனிதே
5. கனிவேலவன் என் தலைமைகொண்ட
கருணைமிக்க ஞானஆட்சியை
கலியுகத்தில் உன் சேவைவழி
அமைத்து உயர்வு கொள்வர்
6. ஆகவே அரங்கன் வாழ் தடம்
ஆறுமுகன் என் சூட்சும தடம்
வரங்களென பெற்று உலகோர் வந்தால் போதும்
வையகத்தில சடுதி ஞான ஆட்சிக்கால மாற்றம் நடந்தேறும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–